Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:5.

Vol. 71 | என் கன்மலையும் என் கோட்டையும் நீரே; சங்.31:3. | டிசம்பர் 2025 | No.12

நீடிய பொறுமையின் ஆதாரத்திற்கான எடுத்துக்காட்டு கிறிஸ்துவே

Christ - the example and source of perseverance

Rich Carmicheal

யோபுவின் உபத்திரவம்

அவன் மிகக் கொடூரமான சூழல்களை சந்தித்தான். தனது உடைமைகள், குடும்பம், ஆரோக்கியம் எல்லாவற்றையும் இழந்து இவை ஏன் சம்பவித்தது என்ற கேள்விக்குள்ளானான். ஆயினும் இழப்பு, நிச்சயமின்மை இவற்றின் மத்தியிலும் கர்த்தர் மேலுள்ள விசுவாசத்தை அவன் விட்டுவிடாமல் பாதுகாத்துக் கொண்டான். அவனது மனைவி அவனைப் பார்த்து: "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனை தூஷித்து ஜீவனை விடும்" என்று சொன்ன போது "தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ?" (யோபு.2:10) என்று கேட்கிறான்.

கர்த்தருடைய நோக்கம் உருக்கமும் இரக்கமும்

யோபின் பொறுமைக்கு ஆண்டவர் ஒரு நோக்கம் வைத்திருந்தார். அவனுடைய உபத்திரவங்களுக்கு ஒரு முடிவு இருந்தது. "...கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்; யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாக அவனுக்குக் கர்த்தர் தந்தருளினார்" யோபு.42:10, 12. இன்னொரு விதமாகக் கூறினால் அவனுக்கு நேரிட்டவை எல்லாம் எதிரிடையாக இருந்தாலும் அவனுடைய மிகப் பெரிய நன்மைக்காக அவர் கிரியை செய்து கொண்டிருந்தார்.

யாக்கோபு குறிப்பிடும்போது கர்த்தர் உருக்கமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்கிறார். எந்த கஷ்டத்தின் வழியாகக் கடந்து செல்லுகிறவர்களுக்கும் இது மிகுந்த உற்சாகத்தைத் தருகிறது. இப்படிப்பட்ட தருணங்களில் நாம் எதையும் புரிந்து கொள்ள முடியாத வர்களாயிருந்தாலும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒரே காரியம் தேவன் அதிக உருக்கமும் கிருபையும் நிறைந்தவர் என்பதே. "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே. அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது. கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன்" புலம்பல் 3:22-24. எவ்வளவு மகிமையான சத்தியங்கள்! தேவனுடைய இரக்கங்கள் நம்மை நிலைநிறுத்துகின்றன. அவரது உருக்கத்திற்கு முடிவில்லை. அவை காலைதோறும் புதியவை! அவரது உத்தமம் மகாப் பெரியது!

எரேமியா மிகுந்த நெருக்கடியால் தனது சொந்த பெலனும் நம்பிக்கையும் இழந்துபோனபோது கூறுவதைத்தான் இருபது வசனங்களில் பார்க்கிறோம். ஆயினும் அவருடைய இரக்கங்களையும் உருக்கங்களையும் உத்தமத்தையும் நினைவுகூரும்போது அவரிலுள்ள நம்பிக்கையால் நிரப்பப் படுவதை காண்கிறோம்.

தேவனுடைய தன்மை நமக்கு எவ்வளவு உற்சாகத்தையும் ஆறுதலையும் தருகிறது. அவர் இரக்கமும் மனதுருக்கமும் உத்தமமுமான தேவன். எனவே நாம் முற்றிலும் அவரைச் சார்ந்து வாழலாம். அவர் நம்மை நேசித்து அதிகக் கரிசனையோடு நமது நன்மைக்காகக் கிரியை செய்கிறவர். "அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" ரோமர் 8:28. நாம் எப்படிப்பட்ட கஷ்டங்கள் வழியாகக் கடந்து சென்றாலும் அவர் தமது இரக்க உருக்க உத்தமத்தால் நம்மை நடத்துகிறார். எனவே எப்போதுமே அவரை முழுவதுமாக நம்பி பொறுமையோடே தொடருவோம்.

கிறிஸ்துவின் நீடிய பொறுமை

"கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப் பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக" 2தெச.3:5. இந்த வசனத்தை மனதில் கொண்டு நாம் உற்சாகமடையலாம். யாக்கோபு 5:11-ல் கூறப்படும் யோபின் பொறுமையும் ஒரே கருத்தையுடையவை. அதாவது **'கீழே தங்கியிருப்பது'** அல்லது **'கீழே நிலைத் திரும்பது'** என்ற பொருளைத் தருகின்றன. எனவே பொறுமையோடு சோதனைகளை சகித்து கர்த்தரில் நிலைத்திருப்பதை அது குறிக்கலாம். இதற்கு ஒரு முன்னோக்கிய பார்வை இருக்கிறது. அதாவது தற்கால அழுத்தங்களைக் கடந்து, மையப்படுத்த வேண்டிய பொருளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகும்.

மிகவும் விசேஷமாகக் குறிப்பிடக்கூடிய உதாரணம், இயேசு கிறிஸ்து சிலுவைக்குச் சென்றதன் மூலம் காண்பித்த பொறுமையாகும். "...இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக் கடவோம். அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ள வர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களை சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்" எபி.12:1-3. பகைமை, அநீதி, வேதனை, அவமானம், பாடுகள் போன்றவற்றை எண்ணக்கூடாத அளவிலே சகித்தார். ஆனாலும் அவற்றில் பொறுமையாயிருந்தார். "சிலுவையின் மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்" பிலி.2:8.

இது இயேசுவுக்கு எளிதாயிருந்தா? அல்லவே அல்ல. மிகவும் கடினமாகவே இருந்தது. அதற்காக அவர் முன் கூட்டியே ஜெபித்தார். "...என் பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது" மத்.26:39. அவர் அதிக வியாகுலப் பட்டு ஜெபித்தபடியால் "...அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது" லூக்.22:44. அவர் தம்முடைய பிதாவின் சித்தத்திற்கு முற்றிலுமாய் ஒப்படைத்து, சிலுவைக்குச் சென்றார். அங்கு தமது ஆவியை பிதாவிடம் ஒப்படைத்தார் லூக்.23:46. மூன்று நாட்களுக்குப் பின்பு கல்லறையில், பிதாவானவர் தமது மகா பெரிய உத்தமத்தின்படியும் தமது வலிய சத்துவத்தின் படியும் மரித்தோரிலிருந்து எழுப்பி, உன்னதங்களிலே உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தினை அவருக்கு அளித்தார் எபே.1:20,21; பிலி.2:9. எப்போதுமே தேவன் அவரை நம்பி காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு நன்மையானவைகளைச் செய்கிறார்.

நமது பொறுமைக்கான ஆதாரம்

நீடிய பொறுமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆண்டவராகிய இயேசுவே. அதைவிட மேலாக, நாம் பொறுமையோடிருக்க ஆதாரமும் ஆதரவுமாயிருக்கிறார். நாம் கிறிஸ்துவின் மரணத்தில் அவரோடு உயிர்த்தெழுதலிலும் பங்கு பெற்று, அவரது ஜீவனை நம்மில் பெறுகிறோம். கிறிஸ்துவே நமக்குள்

(4 -ம் பக்கம் பார்க்க)

உள்ளே...

கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல்லுவேன் என்று சொன்ன கர்த்தருடைய தீர்க்கதரிசி

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P. Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங்.85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதி செய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள் ஏசாயா 30:18.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2025 டிசம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

ஜெபக்குறிப்பு 8. ***உலகமெங்குமுள்ள தீவிரவாதிகளுக்காக***

ஜெப கையேடு புத்தகத்தில் நாம் எழுதின சில ஜெப குறிப்புகளை நகல் எடுத்து கீழே அச்சிடுகிறேன்.

தீவிரவாதிகள் ஒரே அமைப்பினர் அல்ல. இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு பெயர்களில் தீவிரவாதிகள் இருக்கிறார்கள். மொழியின் அடிப்படையில், மதத்தின் அடிப்படையில், கொள்கைகளின் அடிப்படையில் என்று இடத்திற்கு இடம் தீவிரவாதிகள் வித்தியாசப்படுகிறார்கள். இவர்கள் வித்தியாசப்படாத ஒரே காரியம், ஜனங்களைக் கொல்வதுதான்.

ஒவ்வொரு தீவிரவாதிகளுக்கும் ஒவ்வொரு விதமான கோபம் இருக்கிறது.

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு காஷ்மீர் இந்தியாவிலிருப்பதில் கோபமிருக்கிறது. சில அமைப்பினருக்கு தாங்கள் சார்ந்துள்ள மதம் புறக்கணிக்கப்படுவதாகவும், தங்கள் மதம் அழிக்கப்படுவதாகவும் கோபம் இருக்கிறது. சிலருக்கு பலர் ஏழைகளாக இருப்பதும் சிலர் பணக்காரர்களாக இருப்பதிலும் கோபம் இருக்கிறது. சிலருக்கு தங்கள் மொழி அழிந்துவிடுவதாகவும் பிற மொழிகள் வளர்வதாகவும் பயமிருக்கிறது. சிலருக்கு தங்கள் மாநிலத்தில் பிற மாநிலத்தவர் வளர்ச்சியடைவது கோபத்தை உண்டாக்கியிருக்கிறது. தங்கள் மாநிலம் தனியாட்சி பெற வேண்டும் என்கிற தணியாத ஆவலிருக்கிறது. சிலருக்கு அரசாங்கத்தில் காணப்படும் லஞ்சம், ஊழல், போன்றவற்றால் உண்டாகிற கோபம் மிகுந்திருக்கிறது. ஆனால் இவர்கள் யார் மீது கோபப்பட்டாலும் பழி வாங்கப்போவ தென்னவோ பொது மக்களைத்தான். இதுதான் ஆச்சரியமாயிருக்கிறது.

★ ★ ★

இந்தியாவை மையமாக வைத்து செயல்பட்டு வரும் தீவிரவாத இயக்கங்கள் சுமார் 180.

ஜம்மு காஷ்மீரை மையமாக வைத்து இயங்கும் இயக்கங்கள்:

1. அல்-உமர் முஜாஹிதீன் அமைப்பு (Al Umar Mujahideen)
2. மஹாலி-ஆசாதி (Mahaz-e-Azadi)
3. இஸ்லாமி ஜமாத்-இ-துல்பா (Islami Jamaat-e-Tulba)
4. ஜம்மு காஷ்மீர் இஸ்லாமிய மாணவர் விடுதலை முன்னணி (Jammu & Kashmir Students Liberation Front)
5. இக்வான்-உல்-முஜாஹிதீன் (Ikhwan-ul-Mujahideen)
6. இஸ்லாமிய மாணவர் கழகம் (Islamic Students League)

வருகையின் தூதன்
ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0438700**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

7. தெரிக்-இ-ஹுரியத்-இ-காஷ்மீர் (Tehrik-e-Hurriat-e-Kashmir)
8. தெரிக்-இ-நிபாஸ்-பிக்கர் ஜபாரியா (Tehrik-e-Nifaz-e-Fiqar Jafaria)
9. அல் முஸ்தபா விடுதலைப் போராளிகள் (Al Mustafa Liberation Fighters)
10. தெரிக்-இ-ஜிகாத்-இஸ்லாமி (Tehrik-e-Jehad-e-Islami)

கர்த்தர் இவர்களைச் சந்திக்கும்படியாக, இவர்களின் தீவிரவாத செயல்கள் முற்றிலும் அற்றுப்போக, இவர்களை வழிநடத்திச் செல்லும் மனிதர்கள் மனந்திரும்ப ஜெபியுங்கள்.

★ ★ ★

ஜார்கண்ட், மேற்கு வங்கம், ஒரிஸா, சத்தீஸ்கர், பீஹார் போன்ற மாநிலங்களில் நம் தேசத்தின் உள் நாட்டு பாதுகாப்பு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலங்களில் 194 மாவட்டங்கள் மாவோயிஸ்ட், நக்ஸலைட் போன்ற தீவிரவாத இயக்கங்களால் பாதிக்கப் பட்டுள்ளது. நக்ஸலைட்டுகளுக்கு விரோதமாக போராடியதில் கடந்த 10 ஆண்டுகளில் ஏறத்தாழ 7000 படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தேசத்தின் ஆட்சி நிலையை இவர்கள் மிகவும் முடமாக்கியதுடன், ஒவ்வொரு சமூகத்தின் அமைதி குலைந்து, மாவட்டங்களின் நிர்வாகம் பாதிக்கப்பட்டுள்ளது.

நக்ஸலைட்டுகளாலும், மாவோயிஸ்டுகளாலும் பாதிக்கப்பட்ட மாநிலங்கள், மாவட்டங்களில் அரசாங்கம் விழிப்போடிருந்து சுமூகமான முறையில் இந்த பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டுவரவும், நக்ஸல்பாரிகள் தங்கள் கொடிய நடவடிக்கைகளை கைவிட்டு சாதாரண சமூக மக்களாக வாழ்வதற்கு அரசுகள் திட்டங்களை கொண்டுவர ஜெபிப்போம்.

★ ★ ★

நக்சல்கள் என அழைக்கப்படும் நக்சலைட்டுகள் நில ஜமீன்தாரர்களுக்கு விரோதமாகவும், நிலமற்ற கூலியாட்கள் மற்றும் ஆதிவாசி மக்களுக்கு ஆதரவாகவும் கடுமையான போராட்டம் நடத்தி வருகிறார்கள். நக்சலைட்டுகள் குறிப்பாக

(3-ம் பக்கம் பார்க்க)

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபைகளின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக்கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் பொழிந்தருளும், ஆமென். ரோ. 8:26; எபி. 5:7; சகரியா 12:10.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை எழுப்பி அரசாங்கத்தை குற்றம் சாட்டி வருகிறார்கள்.

தற்போது கிடைத்துள்ள தகவலின்படி, நக்சலைட்டுகள் இந்தியாவில் குறிப்பாக சத்தீஸ்கார், ஜார்கண்ட், பீகார், மேற்கு வங்காளம், ஆந்திர பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள சுமார் 150-க்கும் அதிகமான மாவட்டங்களில் தங்கள் ஆதிக்கத்தை செலுத்தி வருகிறார்கள். முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் நக்சலைட்டுகளைப் பற்றிக் கூறும் போது, இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய உள்நாட்டுத் தீவிரவாதிகள் எனக் கூறியுள்ளார். 2010-ம் வருடத்தில் ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலும் 1400-க்கும் அதிகமான தீவிரவாதத் தாக்குதல்கள் மாவோயிஸ்டுகள் மூலம் நிகழ்ந்துள்ளன. இந்தியாவில் 28 மாநிலங்களில் 13 மாநிலங்கள் மாவோயிஸ்டுகளின் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளன. 50,000-க்கும் அதிகமான நக்சல் தீவிரவாதிகள் இருப்பதாகவும், அவர்கள் இந்தியாவிலுள்ள வனப்பகுதிகளில் 5-ல் ஒரு பங்கை ஆக்கிரமித்துள்ளனர் எனவும் தெரிய வருகிறது. கடந்த 15 ஆண்டுகளில் நக்சல் வாதிகளின் பயங்கரவாத தாக்குதலால் 100000-க்கும் அதிகமான பேர் கொல்லப் பட்டுள்ளனர்.

★ ★ ★

உலகமெங்குமுள்ள தீவிரவாதிகளை நாம் ஊடகங்களில் காணலாம்.

கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல்லுவேன் என்று சொன்ன கர்த்தருடைய தீர்க்கதரிசி

சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் மூன்று வருஷம் யுத்தமில்லாமலிருந்தது.

மூன்றாம் வருஷத்திலே யூதாவின் ராஜாவாகிய யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவினிடத்திற்குப்போயிருக்கும்போது,

இஸ்ரவேலின் ராஜா தன் ஊழியக்காரரை நோக்கி: கீலேயாத்திலுள்ள ராமோத் நம்முடையதென்று அறியீர்களா? நாம் அதைச் சீரியா ராஜாவின் கையிலிருந்து பிடித்துக் கொள்ளாமல், சும்மாயிருப்பானேன் என்று சொல்லி,

யோசபாத்தை நோக்கி: கீலேயாத்திலுள்ள ராமோத்தின் மேல் யுத்தம் பண்ண என்னோடே கூட வருகிறீரா என்று கேட்டான். யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவை நோக்கி: நான்தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள், என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள் என்றான்.

பின்னும் யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து: கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்து அறியும் என்றான்.

அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா ஏறக்குறைய **நானூறு தீர்க்கதரிசிகளைக்** கூடிவரச் செய்து: நான் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம் பண்ணப்போகலாமா, போகலாகாதா என்று அவர்களைக் கேட்டதற்கு; அவர்கள், போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக் கொடுப்பார் என்றார்கள்.

பின்பு யோசபாத் நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களையல்லாமல் ***கர்த்தருடைய தீர்க்கதரிசி*** வேறே யாராகிலும் இங்கே இல்லையா என்று கேட்டான்.

அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா, யோசபாத்தை நோக்கி: கர்த்தரிடத்தில் விசாரித்து அறிகிறதற்கு இம்லாவின் குமாரனாகிய **மிகாயா** என்னும் இன்னும் ஒருவன் இருக்கிறான்; ஆனாலும் நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக் குறித்து ***நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன்*** என்றான். அதற்கு யோசபாத், ராஜாவே, அப்படிச் சொல்ல வேண்டாம் என்றான்.

அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா பிரதானிகளில் ஒருவனைக் கூப்பிட்டு: இம்லாவின் குமாரனாகிய மிகாயாவைச் சீக்கிரமாய் அழைத்து வா என்றான்.

மிகாயாவை அழைக்கப் போன ஆள் அவனுடன் பேசி: இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் ஏகவாக்காய் ராஜாவுக்கு நன்மையாயிருக்கிறது; உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப் போல இருக்கும்படி நன்மையாகச் சொல்லும் என்றான்.

அதற்கு மிகாயா: கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல்லுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

அவன் ராஜாவினிடத்தில் வந்தபோது, ராஜா அவனைப் பார்த்து: மிகாயாவே, நாங்கள் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம் பண்ணப் போகலாமா, போகலாகாதா என்று கேட்டான்.

அப்பொழுது அவன் சொன்னது: கர்த்தருடைய வார்த்தையைக் கேளும்; கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறதையும், பரமசேனையெல்லாம் அவரிடம் அவர் வலது பக்கத்திலும் அவர் இடது பக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன்.

அப்பொழுது கர்த்தர் ஆகாப் போய், கீலேயாத்திலுள்ள ராமோத்தில் விழும்படிக்கு அவனுக்குப் போதனை செய்கிறவன் யார் என்று கேட்டதற்கு, ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொன்னார்கள்.

அப்பொழுது ஒரு ஆவி புறப்பட்டு வந்து, கர்த்தருக்கு முன்பாக நின்று: நான் அவனுக்கு போதனை செய்வேன் என்றது.

எதினால் என்று கர்த்தர் அதைக் கேட்டார். அப்பொழுது அது: ***நான் போய், அவனுடைய தீர்க்கதரிசிகள் எல்லாரின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன் என்றது.*** அதற்கு அவர்: நீ அவனுக்குப் போதனை செய்து அப்படி நடக்கப் பண்ணுவாய், போய் அப்படிச் செய் என்றார்.

ஆதலால் கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளையிட்டார்; கர்த்தர் உம்மைக் குறித்துத் தீமையாகச் சொன்னார் என்றான்.

அன்றையதினம் யுத்தம் அதிகரித்தது; ராஜாவைச் சீரியருக்கு எதிராக இரதத்தில் நிறுத்திவைத்தார்கள்; சாயங்காலத்திலே அவன் இறந்து போனான்; காயத்தின் இரத்தம் இரதத்தின் தட்டிலே வடிந்தது.

பொழுதுபோகும்போது அவரவர் தம்தம் பட்டணத்திற்கும், அவரவர் தம்தம் தேசத்திற்கும் போகலாம் என்று இராணுவத்தில் பறைசாற்றப்பட்டது.

அப்படியே ராஜா இறந்த பின்பு, சமாரியாவுக்குக் கொண்டுவரப்பட்டான்; ராஜாவைச் சமாரியாவில் அடக்கம் பண்ணினார்கள்.

அந்த இரதத்தையும் அவனுடைய கவசத்தையும் சமாரியாவின் குளத்திலே கழுவுகிறபோது, கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே, நாய்கள் அவன் இரத்தத்தை நக்கினது 1 இராஜாக்கள் 22:1-38.

★ ★ ★

2025 -ம் ஆண்டு நிறைவு செய்தி:

இதோ, மணவாளன் வருகிறார்

மத்தேயு 25:6.

2000 ஆண்டுகளுக்கு முன், "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" யோவான் 3:16.

இயேசு காடியை வாங்கின பின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார் யோவான் 19:30.

வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.

அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள் யோவான் 20:19,20.

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

இவைகளை அவர் சொன்ன பின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது.

அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று:

கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசு வானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் அப்.1:8-11.

மணவாளன் வரத் தாமதித்த போது, அவர்கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.

நடுராத்திரியிலே, ***இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள்*** என்கிற சத்தம் உண்டாயிற்று.

அப்பொழுது, அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்.

ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.

பின்பு மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்க வேண்டும் என்றார்கள்.

அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் மத்தேயு 25:5-13.

எனது பாடல்:

மணவாளன் இயேசு வானத்தின் மீது
வருகின்ற நினையா வேளை
ஆவல் கொண்டு எதிர்கொள்ளும் மணவாட்டி
மேக மீதில் எழும்பிடுவாள்

1. எக்காளத்தோடும் தூதர்களோடும்
மத்தியவானில் இறங்கியே வருவார்
2. இப்புவி மீதில் சுத்தர்களாக
ஜீவித்து போனோர் எழுந்திடுவாரே
3. திருடன் போல வந்திடுவாரே
நீங்களே நன்றாய் அறிந்திடுவீரே

சகோதரி சாராள் நவரோஜ் பாடல்:

1. தேவன் வருகின்றார் வேகம் இறங்கி
தேவ பர்வதம் தம் பாதம் நிறுத்தி
பூமிதனை நியாயம் தீர்த்திடுவார்
பூலோக மக்களும் கண்டிடுவார்

இயேசுகிறிஸ்து வருகின்றார்
இந்தக் கடைசி காலத்திலே
கர்த்தரைக் குத்தின கண்கள் யாவும்
கண்டு புலம்பிடுமே

2. ஏழாம் தலைமுறை ஏனோக்குரைத்த
எல்லாம் நிறைவேறும் காலம் நெருங்க
இயேசுகிறிஸ்துவின் சத்தியத்தை
ஏற்க மறுத்தவர் நடுங்குவார்

3. தம்மை விரோதித்த அவபக்தரை
செம்மை வழிகளில் செல்லாதவரை
ஆண்டவர் ஆயிரம் பக்தரோடே
அந்நாளிலே நியாயந் தீர்த்திடுவார்

4. எதை விதைத்தாயோ அதை அறுப்பாய்
எல்லா அநீதிக்கும் கூலி பெறுவாய்
கல்வாரி சிலுவை அண்டிடுவாய்
கர்த்தரை நம்பியே தப்பிடுவாய்

5. யுத்தம் துடங்குமுன் மத்திய வானம்
சுத்தரை அழைக்க கர்த்தரே வாரும்
ஆவி மணவாட்டி வாரும் என்றே
ஆண்டவர் இயேசுவை அழைக்கின்றோம்

2025 -ம் ஆண்டு

ஜனவரி : 2025 -ம் ஆண்டு உங்களுக்கு அதிக ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவருடைய ஆலோசனைகள்

பெப்ரவரி : இரட்சிப்பு என்றால் என்ன?

மார்ச் : இரட்சிக்கப்படுகிறவர்கள் சில பேர் தானோ?

ஏப்ரல் : வேதபுத்தகத்தில் அழுத ஏழு பேர்

மேய் : 7 விதமான அக்கினி!

ஜூன் : இயேசுவைப் போல் ஜீவிப்பது
இயேசுவைப் போல் பிரசங்கிப்பது
இயேசுவைப் போல் ஜெபிப்பது

ஜூலை : தாவீதின் தாகம்

ஆகஸ்ட் : தாவீதின் பாவம்

செப்டம்பர் : திறப்பிலே நின்ற பினெகாஸ்

அக்டோபர் : தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்

நவம்பர் : நான் காணிக்கை வாங்குகிறதில்லை என்று சொன்ன தீர்க்கதரிசி

டிசம்பர் : கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல்லுவேன் என்று சொன்ன கர்த்தருடைய தீர்க்கதரிசி

2025 -ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை 12 மாதமும், 12 வருகையின் தூதன் பத்திரிகை அச்சிட்டு அனுப்பியுள்ளோம். வாசகரில் யாருக்காவது பத்திரிகை கிடைக்கவில்லையானால் தயவாய் தெரிவியுங்கள், உடனே அனுப்பி வைப்போம்.

2026 - ம் ஆண்டு

6 அண்டுகளுக்கு முன் நாம் **தபால் சலுகை** இழந்தோம். அதுமுதல் ஆண்டு காணிக்கை **ரூபாய் 500** அனுப்புங்கள் என்று ஆண்டுதோறும் எழுதி வருகிறேன்.

2024 ஜூலை மாதம் நாம் தபால் அலுவலகத்திற்கு அனுப்பின வருகையின் தூதன் பத்திரிகைகள் **இரண்டு மடங்கு** தபால் தலை ஒட்டப்பட வேண்டும் என்று கூறி திருப்பி அனுப்பினார்கள். அதனால் புத்தக அஞ்சல் (Book - Post) என்று அச்சிட்டு அதிக தபால்தலை ஒட்டப்பட்டு பத்திரிகை அனுப்பப் படுவதை அறிவீர்கள். ஆனாலும் வாசகரில் சிலர் இதை கவனிப்பதில்லை. பழைய ஆண்டுகளைப் போல இன்னமும் ரூபாய் 100, 150,200 என்று அனுப்புகிறார்கள்.

உதாரணமாக ஒரு வாசகர் H.M.

17-7-2023 ரூபாய் 100
16-7-2024 ரூபாய் 100
16-7-2025 ரூபாய் 100
மணியாடர் அனுப்பியிருக்கிறார்.

2026-ம் ஆண்டு உங்களுக்கு பத்திரிகை அனுப்ப குறைந்தபட்சம் ரூபாய் 500 ஆண்டு காணிக்கை அனுப்புங்கள்.

அலுவலக நேரம்

காலை 10.00 மணி முதல் 1.00 வரை
மாலை 02.00 மணி முதல் 6.00 வரை

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)
Mobile : 95432 21008
Whats app : 94897 40295

வருகையின் தூதன்

ஜெப நேரம்

பகல் 1.00 முதல் 2.00 வரை

★ உங்களுக்காக
★ உடன் ஊழியர்களுக்காக
★ ஊழியங்களுக்காக
★ உபத்திரவப்படுகிறவர்களுக்காக
★ உறவினர்களுக்காக
★ உலக நண்பர்களுக்காக
★ உலக நாடுகளுக்காக
★ உலகமெங்குமுள்ள தீவிரவாதிகளுக்காக
★ ஊடகங்களுக்காக
★ உயிர் மீட்சிக்காக

நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்.
1தீமோத்தேயு 2:1,2.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறார். நமது விசுவாசத்தின் துவக்கமும் முடிவும் அவரே. நாம் அனைத்திற்கும் அவரையே சார்ந்து இருக்கிறோம். அவராலேயன்றி நாம் எதையும் செய்யக்கூடாது. ஏனென்றால் அவராலேதான் நாம் எல்லாவற்றையும் செய்யக்கூடும் யோவா.15:5; பிலி.4:13. அவருடைய ஜனங்களாக நாம் "சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும்உண்டாவதற்கு மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும். உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்" கொலோ.1:11. "என்கிருபை உனக்குப் போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரி.12:9) என்று அவர் கூறியிருக்கிறார்.

எனவே நீங்கள் சோதனைகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிற இந்தக் கடைசி நாட்களிலே, உங்கள் உதாரணமாகிய கிறிஸ்துவின் வாழ்வு, வல்லமை, கிரியை ஆகியவை உங்களில் காணப்பட உங்களுக்காக ஜெபிக்கிறோம். உங்கள் வாழ்வை அவரது பிரசன்னம் நிரப்பட்டும். அவரது வல்லமை, பிரசன்னம், கிருபை, அன்பு, ஆதரவு ஆகியவை உங்களை நிலை நிறுத்தட்டும். நீங்கள் சந்திக்கிற எந்த எதிரிடையான காரியங்களிலும், செய்கிற எல்லாக் கிரியைகளிலும் அவருடைய இருதயம் அதை நிறைவேற்றுவதில் கவனமாயிருக்கிறது. எல்லா மகிமையும் அவருக்கே உண்டாவதாக.

உங்களில் கிறிஸ்து

CHRIST IN YOU

Charles H Spurgeon (1834 - 1892)

"புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" கொலோ. 1:27.

சுவிசேஷம்தான் மிகச்சிறந்த இரகசியம். அது இரகசியங்களில் இரகசியம். "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்".

சுவிசேஷத்தின் இரகசியத்தின் மையப் பொருள் கிறிஸ்துவே. எண்ணத்திலடங்காத தேவன் மனித தன்மையை தன் மீது எடுத்துக் கொண்டது எத்தனை ஆச்சரியம்! மனிதரால் இது எண்ணக் கூடாததுதான். இது ஒரு இரகசியமாகவே இருக்கிறது. தேவனும் மனுஷனும் ஒன்றிணைந்தது பரலோகத்திலும், பூலோகத்திலும் அதிசயமானது. "மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்" சங்.8:4.

கிறிஸ்துவின் மனித அவதாரம்

மனித அவதாரத்தின் முதல் எண்ணம் ஞானம் நிறைந்த தேவனிடம் உருவாகியது. சர்வ வல்லவரும், சர்வ வியாபியுமான தேவன் 'இம்மானுவேல்' அல்லது தேவன் நம்மோடு என்ற கருத்தை ஏற்படுத்தினார். எல்லையற்ற தேவன் ஒரு குழந்தையானதை எண்ணிப் பார்ப்போம். இதே குழந்தை துக்கம் நிறைந்தவரும் பாடுபடுகிறவருமானார். இந்த ஆலோசனையும், சுயமானதும், ஆச்சரியமானதும், தெய்வீகமானதுமாகும். இரு தன்மைகள் இணைந்தது ஒரு பேரற்புதம்.

சுவிசேஷத்தின் இருதயம் இந்த சத்தியத்தில் துடித்துக் கொண்டிருக்கிறது. உன்னதத்தின் குமாரன் பெத்லகேமில் பிறந்தார். "அப்பொழுது தூதர்கள்: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" *(லூக்.2:14)* என்று பாடினார்கள். நமது ஆண்டவர் மனித அவதாரம் எடுத்தது மனிதகுலத்திற்கு மிகவும் ஆசீர்வாதமானது. "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்" ஏசா.9:6. அந்த குமாரனில்தான் நாம் நமது இரட்சிப்பைக் காண்கிறோம். தேவன் மனித ரூபத்தில் வந்தது சந்தோஷம்.

கிறிஸ்துவின் மகிமையான பணி

நமது ஆண்டவரை நாம் எண்ணிப் பார்க்கும்போது அவர் நமக்காக செய்து முடித்த மகிமையான பணி நம் நினைவுக்கு வருகிறது. மனித அவதாரம் எடுத்த அவர் தன்னைத்தானே சிலுவையின் மரணபரியந்தம் தாழ்த்தினார். அவர் அடிமையின் ரூபமெடுத்து பாவமாம்சமாகி நமக்காக சாபமானார். ஏனெனில் நமது பாவங்களுக்காக இன்னொருவர் தேவையன்றோ. அவர் செய்த சேவை தாழ்மையானது! பாரமானது! அவரது வாழ்வு துக்கம் நிறைந்ததும் தொடர்ந்து இலச்சையும் பாடு நிறைந்த மரணமுமாயிருந்தது. நமது பாரத்தை அவர் சிலுவை மட்டும் சுமந்தார். பிதாவின் நீதியான கோபம் நமக்காக அவர் மேல் வந்தது.

அவர் நமக்காக எவ்வளவோ பாடுகளை சகித்து விட்டார். நமது பாவங்களைக் கடலின் ஆழத்திலே தள்ளி விட்டார். நாம் குடிக்க வேண்டிய கசப்பான பாத்திரத்தை அவர் குடித்து விட்டார். சாபமாயிருந்த பிரமாணத்திலிருந்து விடுவித்தார். நமக்கு நித்திய மான நீதியை சம்பாதித்து விட்டு பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். நமக்காக எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டு நமக்காகக் காத்திருக்கிறார். நாம் அவரைப் பின்பற்றி அவர் இருக்கும் இடத்தை நாமும் அடைய வேண்டும். கிறிஸ்துவின் முடிக்கப்பட்ட பணி நமது நம்பிக்கையின் தூண்களாயிருக்கின்றன. அவர் எப்படிப்பட்டவர்? எதைச் செய்து முடித்தார்? என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றும், என்ன செய்வார் என்றும் கேள்வி கேட்காமல் "அவரே எனக்கு எல்லாமானவர், எனது இரட்சிப்பும் எனது எல்லா ஆசையும் எனக்கவரே" என்று சொல்லுவோம்.

கிறிஸ்துவின் பணிகள்

தீர்க்கத்தரிசி, ஆசாரியன் மற்றும் அரசன் என்ற ஏதேனும் ஒரு பதவி கிடைக்கலாம். நண்பனா? சகோதரனா? தலைவரா? அவரே நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமானவர்.

அவர் நமக்குப் பிரதிநிதி. பழைய ஆதாம் உடன்படிக்கைக்குத் தலைவனாயிருந்தான். இரண்டாம் ஆதாமாகிய இயேசு நமக்காக பலியாகி ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தார். விசுவாசிக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பார்கள்.

கிறிஸ்துவின் ஜனங்கள் அவரில் சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, அவரோடு உயிர்த்தெழுந்து, நித்தியமாக மகிமையோடு தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பார்கள். "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்" எபேசி.2:7. "அவர் நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்" எபேசி.1:6. இதுவே சுவிசேஷத்தின் முழு சாராம்சம். கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். கிறிஸ்துவைப் பிரசங்கியாதவர்கள் சுவிசேஷத்தை அறிவிக்கவில்லை. சூரியன் இல்லாத நாள் இல்லாதது போல கிறிஸ்து இல்லாத சுவிசேஷம் இல்லை. கிறிஸ்துவே தேவனுடைய சுவிசேஷத்தின் ஜீவன், ஆத்துமா, சாரம், எல்லாமுமாயிருக்கிறார்.

கிறிஸ்துவே

கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் மேலானவர். கிறிஸ்துவே எல்லாருக்கும், எல்லாவற்றிற்கும் மேலானவர். நமக்கு உதவி செய்கிறவர்கள், நண்பர்கள் எல்லாரைக்காட்டிலும் இயேசு மேலானவர். அவர்கள் நமக்கு நன்மையான வைகளைத் தருகிறார்கள். ஆனால் இயேசுவோ தம்மையே நமக்காக அளித்துவிட்டார். அவர் ஞானம், நீதி, பரிசுத்தம், இரட்சிப்பு ஆகியவைகளை மட்டுமல்ல அவரையே தந்தபடியால் அவரன்றி நாம் வாழவே முடியாது.

எவ்வளவு அதிகமாக கிறிஸ்துவால் நாம் நிரப்பப்பட்டிருக்கிறோமோ அவ்வளவு அதிகமாக நாம் நமது வெறுமையையும் உணருவோம். அவரை எவ்வளவாக அறிந்து கொள்கிறோமோ அவ்வளவாக அவரை அறிய வாஞ்சிப்போம். பலவருடங்களாகவே கிறிஸ்தவராயிருந்த பவுல் பிலிப்பியருக்கு நிருபம் எழுதும் போது "இப்படி நான் அவரையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும்..." *(பிலி.3:10)* என்று கூறுகிறார். பவுல் அவர்களே நீங்கள் இன்னும் கிறிஸ்துவை அறியவில்லையா? என்று கேட்டால் அவர் பதிலாக 'ஆம்' அவரைப் பற்றி அறிந்த அறிவு போதாது என்றும் அவரைப் பற்றிய அறிவு அறிவுக் கெட்டாதது என்றும் கூறுவார். "எல்லா நதிகளும் சமுத்திரத்தில் ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது; ..." பிர.1:7. தேவனுடைய கிருபை, அன்பு மற்றும் ஆசீர்வாதங்கள் ஆகியவை நமது ஆத்துமாக்களுக்குள் பாய்ந்தாலும் அது இதயத்தை நிரப்பிக் கொண்டிருந்தாலும் நாம் இன்னும் வாஞ்சித்துக்கொண்டு தானிருக்கிறோம். ஆண்டவரே உமது வெகுமதிகளை அல்ல, உங்களையே, உங்களை மட்டுமே எங்கள் இருதயங்கள் வாஞ்சிக்கின்றன.

கிறிஸ்து உங்களிலிருப்பது இந்த இரகசியத்தின் இனிமை

கிறிஸ்து நமது இருதயங்களிலிருப்பது ஒரு விலையேறப்பெற்ற அனுபவம். இங்குதான் கொழுப்பும் நிணமுமிருக்கிறது. கிறிஸ்து நமது வாழ்க்கைப் படகில் இருந்தால் அமைதியும் பாதுகாவலும் உண்டு. கிறிஸ்து உங்கள் வீடுகளிலும், இருதயத்திலும், உங்களிலும் இருப்பது அருமையானது. அது தேன்கூட்டிலிருந்து ஒழுகிவரும் தேனைப் போன்றது.

கிறிஸ்து உங்களிலிருப்பது - முதலாவது - கிறிஸ்து விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டார். கிறிஸ்து இயேசு ஒரு மனிதனுக்குள் பிரவேசிப்பது ஆச்சரியமானது. இதைவிட

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆச்சரியமானது என்னவென்றால் நமது அற்ப விசுவாசமாகிய இடுக்கமான திறப்பு வழியாக அவர் உள்ளே பிரவேசிப்பது ஆகும். மிகப்பெரிய சூரியன் சிறிய பூமியில் ஒரு சிறு இடத்தில் ஒரு துவாரம் மூலம் பிரவேசிக்க முடியும். எனவே கிறிஸ்துவும் நமது அற்ப விசுவாசத்தின் மூலம் உள்ளே வர முடியும். ஒரு சிறு துவாரம் மட்டும் போதும். நீங்கள் ஒரு எளிய விசுவாசி யாயிருந்து இரட்சிப்பின் நிச்சயத்தைக் குறித்து எண்ணமுடியாமலிருந்தாலும் சூரிய ஒளி ஒரு இடுக்கமான துவாரம் வழியாக வருவது போல கிறிஸ்து உங்கள் சிறு விசுவாசத்தின் மூலம் உங்கள் இருதயத்தில் பிரவேசிக்க முடியும். உங்கள் ஆண்டவரின் பிரகாசமான முகத்தை உங்கள் இருதயத்தின் சிறு இடைவெளிகள் வழியாகப் பார்க்கும் போது, "இந்த சிறு ஒளிக்கீற்றுகளால் திருப்தியடையப் போவதில்லை, அவருடைய முகப்பிரகாசத்தில் நடப்பேன். பரலோக தூய ஒளியில் நான் களி கூரட்டும்" என்று சொல்லுங்கள். விசுவாசத்தில் வளருங்கள். உங்கள் ஏற்றுக் கொள்ளும் திறனை விசாலமாக்கி விடுங்கள். தூய ஆவியால் கிறிஸ்து உங்கள் உள்ளான ஆத்துமாவை நிரப்பட்டும்.

இது கிறிஸ்துவை அவரது முழு வல்லமையோடு அனுபவிப்பது என்று பொருள்படும். ஒரு நோயை நீக்கக்கூடிய ஒரு விலையேறப்பெற்ற ஔஷதம் இருந்தாலும் அதை பயன்படுத்தா விட்டால் அதனால் எந்த பயனுமில்லை. அந்த மருந்து உடலுக்குள்ளே செலுத்தப் பட்டு, அவனது இரத்தம் சுத்திகரிக்கப் பட்டு, அவனது உடலை பலப்படுத்து மானால் பிறருடைய சாட்சி இல்லா மலேயே அவன் அதைக் குறித்து அறிந்து கொள்ள முடியும். கிறிஸ்து உங்களில் வந்து, உங்கள் பாவங்களை மன்னித்து, உங்கள் ஆத்துமாவை அன்பினாலும், நற்பண்புகளாலும், பரிசுத்தத்தாலும் நிரப்பி, இருதயத்தை ஆறுதலால் நிரப்பி, பரலோக எண்ணங் களால் பற்றிஎரியச் செய்யட்டும். அப்போது கர்த்தரை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். கிறிஸ்து விசுவாசிக்கப் பட்டு, சொந்தமாக்கப்பட்டு, அனுப வத்தில் எடுக்கப்பட்டு, உங்களில் பிரவேசிக்கும்போது இந்த உலகம் வாழத்தக்கதாகிவிடும்.

மேலும் கிறிஸ்து நம்மிலிருக்கும் போது அவர் ஆளுகை செய்கிறவரா யிருக்கிறார். கிறிஸ்து உங்களில் என்பது ஒரு இராஜரீக வார்த்தை. உங்களிலிருந்து கொண்டே கிறிஸ்து தனது செங்கோலை பயன்படுத்துகிறார். அவர் அனைத்து வல்லமைகளையும், ஆசைகளையும் அடக்கி பரத்தின் மகிமைதனைக் கொண்டு வருகிறார். அவரது மாட்சிமை வெளிப்படுகிறது.

இயேசுவின் ஆட்சி நமக்கு முழு சுயாதீனத்தை அளிக்கிறது

கிறிஸ்து உங்களில் என்பது கிறிஸ்து உங்களை நிரப்புவதாகும். இது ஆச்சரியமான அனுபவம். அவர் முழுவதும் நிரப்புகிறவர். ஒரு மனிதனுடைய தோட்டம் களைகளை மட்டும் உருவாக்கியதாம். இறுதியில் அங்கு ஒரு வித்தியாசமான மலர் தோன்றியது. அவன் ஒரு கைப்பிடியளவு இந்த விதையை விதைத்து அது தானாக வளரும்படி விட்டுவிட்டான். அவன் அது எப்படி வளருகிறது என்று அறியாமல் ஒவ்வொருநாளும் தூங்கி விழித்தான். ஒருநாள் அவன் தனது நுழைவாயிலைத் திறந்தபோது கண்ட காட்சி மிகவும் ஆச்சரியமானதாயிருந்தது. அவன் விதைத்த விதைகள் ஒருவித அழகிய மலர்களை உருவாக்கும் என்று எண்ணி உற்று நோக்கினான். தோட்டம் முழுவதையும் அந்தச்செடி மூடி யிருந்தது. அதன் மலர் களைகளை அகற்றிஒரு முனை முதல் மறுமுனை மட்டும் ஒரு சுவரிலிருந்து மறுசுவர் வரைக்கும் அந்த அழகிய மலரின் நிறமும் நறுமணமும் தோட்டத்தை நிரப்பியது. கிறிஸ்துவே அந்த பிரசித்தி பெற்ற மலர். நமது ஆத்துமாவாகிய நிலத்தில் விதைக்கப்பட்டிருக்கிறார். அவர் களைகள், விஷப்பூண்டுகள் போன்றவற்றை விரைவில் அழித்து விடுவார். உங்கள்தன்மை முழுவதுமாக கிறிஸ்துவின்தன்மையாகிவிடும். இந்தக் காட்சியை நாம் நமது இருதயத்தில் உணர்ந்துகொள்ள தேவன் உதவி செய்வாராக.

கிறிஸ்து உங்களில் வாழும் போது நாம் கிறிஸ்துவைப் போல் ஆகுமட்டும் நம்மை மாற்றுருவாக்கு கிறார். குளிர்ந்த கருமையான இரும்புப் பாளத்தை நெருப்பில் நீண்ட நேரம் இடும்போது அக்கினி அதனுள் செல்கிறது. இந்தப்பாளம் அக்கினி போலவே மாறுகிறது. இப்போது மோசே கண்ட காட்சி நினைவில் வருகிறது. ஓரேபில் முட்செடி பற்றி எரிவதை மோசே கண்டான். அவனது பாதரட்சை களைமாற்ற கட்டளை பெற்றான். அந்தச் செடி வெறும் நெருப்பாகவே மாறி விட்டது. இது போலவே கிறிஸ்து நம்மில் பிரவேசிக்கும்போது நம்மை உயர்வான நிலைக்குக் கொண்டு செல்லு கிறார். பவுல் சொல்லுவது போல: "...இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்..." கலா.2:20. இயேசு ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் சுத்திகரிக்கிறார். அவரோடு பரிபூரண நிலையில் பரத்தில் வாசம் செய்ய ஆயத்தப்படுத்துகிறார்.

கிறிஸ்து உங்களில் - இதை நான் விளக்குவது எப்படி? அவர் உறுதியான அடிமரம். அதில் ஒட்டப்பட்ட சிறு துண்டுகள் நாம். அவரோடு இணைக்கப் பட்டிருக்கிறோம். பழைய தண்டிற்கும் புதிய தளிருக்கும் தொடர்பு இல்லா விடினும் இறுதியில் பழைய தண்டி லிருந்து சாறு, ஒட்டப்பட்டதுண்டிற்குள் செல்லுகிறது. இரண்டும் இணை கின்றன. இப்போது கிறிஸ்து நம்மில் பிரவேசிக்கும்போது எப்படி நமது வாழ்வு அவரது வாழ்வாக மாறிவிடுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

கிறிஸ்து உங்களில் இருப்பது வல்லமை உங்களில் இருப்பதாகும். கிறிஸ்து வரும்வரை நாம் பெலனற்ற வர்களாக இருந்தோம். ஆனால் இப் போது துரைத்தனங்களோடும் அதிகாரங் களோடும் எதிர்த்து வெற்றி பெறுகிறவர் களாயிருக்கிறோம்.

கிறிஸ்து உங்களில் என்பது ஒரு ஆசீர்வாதம்! சந்தோஷமான அனுபவம்! மணவாளன் நம்மோடிருக்கிறார். அரசர் நம்மோடு இருப்பதால் நாம் மகிழ்ச்சியா யிருக்கிறோம். அரசர் சார்லஸ், நியூ மார்க்கெட் என்ற பகுதியில் வாழச்சென்ற போது அந்த தரித்திரம் நிறைந்த கிராமம் கனவான்களுடைய இடமாக மாறி விட்டதாம். நிச்சயமாக கிறிஸ்து நமது இதயங்களில் வாசம் செய்தால் ஆவிக் குரிய வறுமை மாறி ஆசீர்வாதமான ஐசுவரியம் நிரம்பும்.

அவரது மகிமையின் பிரசன்னத்தை வரவேற்போம்

கிறிஸ்து உங்களில்! நம்மோடு நமது கூரையின் கீழ் அவர் வாழுவது எத்தனை ஆச்சரியம்! "வாசல்களே உங்கள்தலைகளை உயர்த்துங்கள்,அநாதி கதவுகளே உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்" சங்.24:9. அவரது பிரவேசம்கனத்தைக் கொண்டு வருகிறது. ஒரு வினாடி அவர் கால்கள் பதிந்தாலும் அந்த இடம் மகிமைப்படும். நமது இருதயத்தில் அவர் பிரவேசித்தால் கனம், மகிமை, அழியாமை, பரலோகம் மற்றும் தெய்வீக நன்மைகள் தொடரும்.

"அவர் என்னில் வந்து தங்கட்டும்" என்று நாம் சொல்லும் போது தன்னைத் தாழ்த்துகிறவர்களுக்குள்ளே அவர் தாழ்மையுடன் வருவார். இருதயம் நொறுங்குண்டவர்களை அவர் ஆசீர் வதிப்பார். அடுத்து சுத்தமாயிருக்க வேண்டும். தேவனுடைய பாத்திரங்கள் அதிக சுத்தமாயிருப்பது அவசியம். அதோடு வெறுமையாயிருக்க வேண்டும். சுயம், பெருமை, மாம்சம் இருக்கும் இடத்தில்அவர் வாசம் பண்ண முடியாது. அவர் விரும்பப்படாத இடத்தில் இயேசு தங்குவதில்லை. அவர் வருகையால் மகிழ்ந்து களிகூருங்கள். அவருக்கான பசியும்தாகமும்உடையவர்களாயிருங்கள். அவர்மேல் வாஞ்சையும் அவர்மேல் மதிப்பும் உடைய மக்கள் அவரின்றி சந்தோஷமாக வாழ மாட்டார்கள்.

2026 தமிழ்நாடு தேர்தலுக்காக ஜெபிக்கவும்

அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர் களின் விஷயத்தில் நீடிய பொறுமை யுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?

சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று அவர்களுக்குச் சொல்லுகிறேன் லூக்கா 18:7,8.

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற பத்தியென்ன வெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங் களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.

1தீமோத்தேயு2:1

மேரி மான்சனும் தேவனுடைய உத்தமமும் - பகுதி 3

Marie Monsen and the faithfullness of God - Part 3

Marie Monsen

1929-ல் நார்வேஜியன் மிஷனெறி மேரி மான்சன் வடசீனாவில் பிரயாணம் பண்ணி, கர்த்தருடைய வழிநடத்துதலின் படி ஒரு நீராவிப்படகில் சீனகடற்கரை யோரமாக பிரயாணம் செய்தபோது படகு கடற்கொள்ளையர்களால் பிடிக்கப் பட்டது. மேரி மட்டுமே மேல்நாட்டுக் கிறிஸ்தவப் பெண்மணியாக அந்தப் படகில் காணப்பட்டாள். மற்ற அனைத்துப் பிரயாணிகளின் பொருட் களும் கைப்பற்றப்பட்டு அறைகளி லிருந்து வெளியேற்றப்பட்டனர். மேரி மட்டுமே அவளது சிறிய அறையில் இருந்து கொண்டிருந்தாள். அது சிறிய கட்டணத்திற்கு வாடகைக்கு அமர்த்தப் பட்டிருந்தது. மேரிமான்சன் இந்தப் படகும் பிரயாணமும் தேவனுடைய திட்டம் என்று அறிந்திருந்தாள்.

கப்பலில் ஒரு **'தேனீர் வியாபாரி சிறுவன்'** இருந்தான். ஒவ்வொரு நாளும் அவன் இரண்டு முறை தேனீர் கொண்டு வருவான் இரண்டாம் நாள் எனது அறையில் கம்பிவலை பொருத்தப்பட்ட ஒரு உட்கதவு இருப்பதைக் கண்டேன். எனது வேண்டுகோளின்படி அந்தச் **சிறுவன்** (Screw)திருகு, திருகு ஓட்டி ஆகிய வற்றைக் கொண்டு வந்தான். ஒரு கொக்கி உள்ளாலே பொருத்தப்பட்டது. எனவே எனது விருப்பப்படி கதவைப் பூட்டவும் திறக்கவும் கூடியதாயிற்று. கதவைப் பூட்டியே வைத்திருந்தேன்.

நான் மட்டும் தனியாக இருக்கக் கூடிய ஒரு அறையைத் தந்த தேவனுக்கு ஒருமுறைகூட நன்றி செலுத்தினேன். இதுவரை கொள்ளையர்கள் விருப்பம் போல உள்ளே நுழையக்கூடியதா யிருந்தது. இப்போது அவர்கள் தள்ளியும் நான் திறக்காவிட்டால் அவர்கள் கடந்து செல்வார்கள். அவர்கள் கேட்டபோதெல் லாம் நான் கதவைத் திறந்து கொடுத்தேன். இது அவர்களுக்கு சுவிசேஷம்சொல்ல ஒரு வாய்ப்பு. அவர்கள் மனச்சாட்சியை இது தொடுவதாயிருந்தது. எனினும் எனக்குள் இதுவரை எந்த பயமுமே இல்லாதிருந்தது.

எனது அறையில் உட்கார அனேகருக்கு வசதியாகத் தோன்ற வில்லை. எனவே முதல் பத்துநாட்க ளுக்குப் பின் அவர்கள் வருவதை நிறுத்திவிட்டார்கள். ஆனால் வேளா வேளைக்குத் தங்கள் உணவுப் பாத்திரங் களை எடுத்துக் கொண்டு எனது கதவுக்கு வெளியே உட்கார்ந்து சாப்பிடுவார்கள். அது எனக்கு அவர்களோடு பேசுவதற்கு ஒரு வாய்ப்பாக இருந்தது. வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு சுவிசேஷப் பிரதி களைக் கொடுத்தேன். அப்போது அதனை ஒருவர் வாசிக்கவும் இன்னொ ருவர் விளக்கவும், நான் இறுதி வார்த்தை களைப் பேசவும் கூடியதாயிருந்தது. நானும் சில கேள்விகளைக் கேட்கவும் அவர்களும் அவ்வாறே கேட்கவும் இதனால் சுவிசேஷத்தை அவர்கள் கேட்க தேவன் என்னை அனுப்பியதை உறுதி பண்ணிக் கொண்டேன்.

உணவைப் பொறுத்தவரை பிரயாணிகளான கைதிகள் அனைவரும் கொள்ளையர்களால் ஒவ்வொரு நாளும் அளிக்கப்பட்ட இருவேளை சூடான உணவால் திருப்தியோடிருந்தனர். ஆனால் அனைத்தும் களவாடப்பட்ட பொருட்களால் தயாரிக்கப்பட்டவை. இவ்வகையான களவாடப்பட்ட உணவை நான்உண்ண விரும்பவில்லை. அந்த எண்ணமே என்னை வியாதிக்குள் ளாக்கியது. எனவே இதைக் குறித்து எதையும் கேள்வி கேட்காதிருந்தேன்.

தேவையான எல்லாவற்றையும் தேவன் கொடுத்தார். **"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறை வாக்குவார்"** பிலி.*4:19*. கப்பல் யாத்திரைக்கு முன்பாகவே ஆண்டவருடைய கட்ட ளைப்படி ஆப்பிள் பழங்களை வாங்கி வைத்திருந்தேன். இப்போது அவை களை சாப்பிட்டேன். கொள்ளையர்கள் என்னிடம் பீயர்கள் அல்லது ஆரஞ்சுகள் இருந்தால் கொடுக்கும்படி கேட்டார்கள். ஆனால் ஆப்பிள்களை அவர்களில் எவரும் கேட்கவில்லை.

நீண்டகாலமாக நான் நான்கு பெட்டிகள் நிரம்ப சாக்லேட்டுகளும் இனிப்புகளும் வைத்திருந்தேன். அவை வெவ்வேறு நாடுகளிலிருந்து அனுப்பப் பட்டவை. அதை நான் யாருக்காவது கொடுக்க எண்ணம்வரும்போது என்னி லிருந்து ஒரு சத்தம், **"அவசர நிலைக்காக அதை வைத்துக்கொள்"** என்று கேட்கும். அவற்றைக் கொடுப்பது கஷ்டமாகி விடும். **"நீ வயதாகிக் கொண்டே போகிறாய், நீ மிகவும் பிசினியாகவும் ஆகிவிட்டாய். பெரிய சுமையோடு பிரயாணம் செய்கிறாய்"** என்றும் எண்ணவேண்டியதாயிருக்கும். ஏறக்குறைய பதினைந்து கட்டுகள் பிஸ்கோத்துகளும் என்னிடமிருந்தன. இவையெல்லாம் எப்போதோ பலரால் அளிக்கப்பட்டவை. **'இவை யெல்லாவற் றையுமே அவசர காலத்துக்காக வைத்துக் கொள்'** என்ற ஒரு சத்தம் எனக்குள் தொனித்துக் கொண்டிருந்தது.

என் தேவனை நான் துதித்தேன். இப்போது அவை பயன்படுகின்றன. ஒன்பது நாட்கள் அவற்றைப் பிரித்து வைத்து சாப்பிட்டேன். பின்பு கொள்ளை யர்களின் உணவை சாப்பிடாமலிருக்க ஆண்டவர் வழிசெய்யும்படி எதிர்பார்த் தேன். தேவன்எலியாவைக்காகங்களைக் கொண்டு போஷித்தவர், அவர் எனக்குக் கவலையில்லாமல் பாதுகாத்தார்.

பத்தாவது நாள் அதிகாலையில் எனது கதவு மெதுவாக தட்டப்பட்டது. நான் எனது மரப்படுக்கையிலிருந்து துள்ளி எழும்பினேன். எனது இதயம் இவ்வாறு பாடியது: **'இதுவே காகம்!'** *1ராஜா.17:4.*

அங்கு நின்றது இரண்டாவது தலைவன். இதுவரை அவனை நான் பார்த்ததில்லை. அந்தத் தேனீர்சிறுவனை மட்டுமே பார்த்திருக்கிறேன். அந்த தலைவன் என்னிடம் மெதுவான குரலில்:-

"உங்களிடம் ஏதேனும் உணவு உள்ளதா?"
"என்னிடம் ஏதுவுமில்லை"

"காவலாளி அடுத்த பக்கமாகச் செல்லும் போது நான் வருகிறேன். என்னிடம் ஒரு பெட்டி நிறைய முட்டைகளும் ஒரு டப்பா கேக்குகளும் இருக்கின்றன. அவைகளை உங்களுக்குத் தருகிறேன். நான் டீயென்ட்சின் என்ற இடத்தில் என் சொந்த நேர்மையான பணத்தால் இவற்றை வாங்கி வந்தேன்" என்றான்.

ஆச்சரியமாக **"அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே, நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும் போதே நான் கேட்பேன்"** (ஏசா.65:24) என்ற வாக்கு நிறைவேறியது. இந்த ஆயத்தமாக்கப் பட்ட அறையில் உணவும் ஆயத்த மாயிற்று. ஒவ்வொருநாளும் அதற்குப் பின்பு அவன் வந்து இரண்டு அல்லது மூன்று முட்டைகளைத் தன் சட்டைப் பையில் எடுத்துக்கொண்டு போய்விட்டு சிறிது நேரத்துக்குப் பின்பு அவற்றை வேக வைத்துக் கொண்டு வருவான். நான் காலை உணவுக்காக ஒன்றையும், ஒன்றி ரண்டை மதிய உணவுக்காகவும், ஒன்றை இரவு உணவுக்காகவும் வைத்திருப்பேன். இவற்றோடு ஒரு இனிப்பு கேக்கை காலை யிலும் ஒன்றைப் பகலிலும் சாப்பிட் டேன். எனது சிறையிருப்பு முடியும் வரை இது எனக்குப் போதுமானதாயிருந்தது.

இந்த எளிய உணவு என் சரீரத்துக்குப் போதுமானதாக இருக்க ஆண்டவரிடம் ஜெபித்தேன். இதனால் எந்தச் சிக்கலும் உடலுக்கு வராதபடி ஜெபித்தேன். ஆக இந்த உணவு மிகவும் திருப்தியானதாயிருந்தது.

கொள்ளையர்கள் அடிக்கடி என்னிடம் வந்து அவர்களது உணவைப் பகிர்ந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டனர். எதை நான் கேட்டாலும், விரும்பினாலும் அதைதர அவர்கள் ஆயத்தமாயிருந்தனர். அவர்கள் அடிக்கடி எனக்கு டப்பாவில் அடைத்த பழங்களைக் கொடுத்தனர்.

"நன்றி, வேண்டாம் இதெல்லாம் களவாடியவை. நான் எதைக் கேட்டாலும் நீங்கள் சென்று இன்னொருவரிடம் அதைத் திருடிக் கொண்டுவருவீர்கள்" என்பது எனது வழக்கமான பதில். **"நான் திருடிய உணவை உண்ணுவதில்லை"** என்பேன். நான் பட்டினியால் மரித்து விடுவேன் என்று அவர்கள் சொன்னபோது, **'என் பரம தகப்பன் என்னை உயிரோடு காப்பார்'** என்று அவர்களிடம் உறுதியாகக் கூறினேன்.

தேவனுடைய அதிகமான உதவி

ஏப்ரல் 18-ம் நாள் காலை பீக்கிங் என்ற இடத்தைக் கடந்தபோது நார்வே யிலிருந்து எனக்கு ஒரு பார்சல் வந்தது. கிறிஸ்மஸுக்கு முன்னால் வர வேண்டிய அந்தக்கட்டு மிகவும்பிந்தி வந்தது. ஒருநாள் முந்தி வந்திருந்தால் கூட மற்ற கம்பளி ஆடைகளுடன் வேனிற்காலத்திற்காக பத்திரப்படுத்தியிருப்பேன். முதற்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையில் எனது சுமையை நினைத்து வருந்தினாலும் அதைத் திறந்தபோது கடுங்குளிர்காலத்துக்கேற்ற ஆடைகளைக் கண்டு ஆறுதலடைந்தேன்.

உடலை சுத்தப்படுத்துவதற்கான தண்ணீர் வசதி அறையிலில்லாதிருந்தது. **'தேனீர்'** என்று கொடுக்கப்படும் வெந்நீரை துணியில் நனைத்து உடலை சுத்தம் செய்து கொண்டேன்.

மீட்பு

சமயம் வந்ததும் நான் ஒரு பெரும் தொகையினை மீட்புக்காகக் கொடுப்பே னென்று கொள்ளையர்கள் எதிர்பார்த்தனர். மற்ற பயணிகள் பணத்தினை கொடுப்பதாக எழுதிக் கொடுக்க சம்மதித்தனர்.

கொள்ளையர்கள் பணத்தைக் குறித்து என்னிடம் பேசவேயில்லை. ஆனால் அடிக்கடி **"நீங்கள் திரளான பணத்துக்குத் தகுதியானவர்கள்"** என்று கூறி கொள்வது வழக்கம்.

நானும் அதை அறிந்திருந்தேன். எனவே அவர்கள் ஏராளமான பணத்தைக் கேட்டார்கள்.

நானோ ஒரு டாலர்கூட கொடுக்க மறுத்தேன். நான் தேவனுடைய பிள்ளை, ஒரு காசுமின்றி என்னை விடுவிக்க அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார் ஏசாயா.45:13. இதை அவர்களிடம் கூறினேன்.

அவர்களோ பணத்துக்காக என்னை மிரட்டி சிறைவைத்துக் கொள்வ தாக மிரட்டினர்.

"உங்களுக்கு கோபம் வரதா" என்று கேட்டனர். **"இல்லை நான் அதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அனுப்பப்பட்டேன். அதைச் செய்கிறேன்" என்றேன்.**

இறுதியில் அவர்கள் **"இந்த சமாதானத்தை பரிந்து கொள்ள முடிகிறதா"** என்று பேசிக் கொண்டனர். **"இவர்கள் வித்தியாசமாகக் காணப்படுகின்றனர்"** என்பதைக் கேட்டு தேவனைத்துதித்தேன்.

(தொடரும்.)

நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஜேம்ஸ் மான்ட்காமரி என்பவர் தேவன் தமது சபையிடம் எதிர்பார்ப்பது என்ன என்று எழுதியிருக்கிறார். அவர் கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட அவரது வீரர்கள் குழுவாக அவரது கொடியின் கீழ் வெற்றியுடன் அவர் தொடங்கிய பணியை நிறைவேற்றச் செல்லுவதை காட்சியாக வைத்து இப்படி எழுதினார்:

கொஞ்சமாக, சிறியதாக, பெலவீனமாக
உங்கள் குழு இருந்தாலும்
உங்கள் தலைவனின் பெலத்தால் நீங்கள்
பலசாலிகள்
எல்லா தேசத்தையும் முற்றுகையிடச்
செல்லுங்கள்.
இறுதியில் அனைவரும் அவருக்கு
சொந்தமாக வேண்டும்
அவரது பாதங்களில் வெற்றியின் கொள்ளை
களை
படைப்பதில் மகிழ்ச்சி அடைய வேண்டும்.
உங்களையே வெற்றிச் சின்னமாக
அவரது பெரிய நியாய தினத்திலே படைப்பீர்

பயப்படவேண்டாம், சோர்ந்து போக
வேண்டாம், நின்றுவிட வேண்டாம்!
மனிதரைப் போல திடன்கொள்ளுங்கள்
எல்லா தேசங்களும் கிறிஸ்துவின் முன்
பணியட்டும்
வெற்றிக் கீதம் பாடட்டும்
வெண்கலக் கதவுகள் உயரட்டும்
இரும்புப் பாளங்கள் விலகட்டும்
இதோ மகிமையின் ராஜா கடந்து
செல்கிறார்.
சிலுவை தேசத்தை வென்றுவிட்டது.

தேவனுடைய ஆச்சரியமான வாக்குத்தத்தங்களின் கரிசனை, பாதுகாவல் ஆகியவற்றால் உற்சாகப்படுத்தப்பட்டு கடைசிச்சத்துருவாகிய சாத்தானை கிறிஸ்து மேற்கொண்டார். எனவே வீரமுள்ள சபை எழுந்து கிறிஸ்து கட்டளையிட்டதுபோல முன்னேறிச் செல்ல வேண்டும். அவரின் பெலனால் பெலனடைந்து ஆத்துமாக்களை சேர்க்க வேண்டும். அவருடைய கிருபையின் வெற்றிச் சின்னங்கள் நாம். அவருடைய கிருபையால் இரட்சிக்கப்பட்ட நாம் அதற்குத் தகுதியாக வாழ வேண்டாமா? நம்மை முழுமனதோடு அவருக்கு ஒப்புக்கொடுத்து கீழ்ப்படிதலோடு சுவிசேஷத்தை எடுத்துச் சென்று அந்த மகிமையான வருகையின் நாளுக்காக செயல்படுவோம்.

கிறிஸ்துவின் கொடிக்குக் கீழ் முன்னேறுவோம்

Forward under Christ's banner

Lois J Stucky (1928- 2014)

கிறிஸ்தவர்களாகிய நாம் திரண்டு வரும் அந்தகாரத்தை மறைக்க நமது விளக்குகளை எப்படி எரியச் செய்வது? நம்மில் வாசம் செய்யும் தூய ஆவியானவர் மூலமாகவே அவரது வல்லமையால் நாம் பிரகாசிக்க முடியும். அதற்கு ஒரு சுத்தமும், பரிசுத்தமுமான இருதயமும், தூய்மையாக்கப்பட்டு ஆவியாலும் நிரப்பப்பட்ட இருதயமும் வேண்டும்.

தேவனை எழுப்புதலுக்காக தொடர்ந்து தேடுவோம். அவர் பலத்த வல்லமையோடு வந்து பாவ உணர் வடையச் செய்து, அனேக மக்களை மாறுதலடையச்செய்வாராக. ஒரு எழுப்பு தலடைந்த சபை நல்ல அறுவடை பெறுவதற்கான தேவனுடைய வழி. உலகம் முழுவதிலும் அதிக அளவிலான ஆவிக்குரிய தேவைகள் இருக்கின்றன. திரளான மக்கள் தவறான மார்க்கங்களிலிருப்பதால் அவர்களுடைய நம்பிக்கை உண்மையான இரட்சகரான இயேசு கிறிஸ்துவின் மேல் இருக்கவில்லை. சிலர் வெளிப்படையாகவே அந்திக்கிறிஸ்துவாக இருக்கிறார்கள். சிலர் தேவபயமுள்ள வர்கள் போல காணப்பட்டாலும் கிறிஸ்து வின்ஜீவன் அவர்களுக்குள் இல்லை. இந்த உலகத்தையும் அதின் சம்பத்தையும் நாடி தேவனுக்கு சமயம் கொடாத புத்தியீன ராயிருக்கிறார்கள். தேவன்தான் இப்படிப் பட்ட இருதயங்களை மாற்றவேண்டும்.

தேவனால் எல்லாம் கூடும் என்று இயேசு சொன்னார். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். "நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, ... இதோ உலகத்தின் கடைசி பரியந்தம் நான் உங்களோடிருக்கிறேன்" என்றும் அவர் கூறினார் மத்.28:18-20.

தேவகுமாரனாகிய இயேசு பூமியில் இறங்கிவந்து மக்களை சாத்தானுடைய வல்லமையிலிருந்து விடுவித் தார். அவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்து மூன்றாம்நாள்உயிரோடு எழுந்தார். அவருடைய ஆசீர்வாதமான வாழ்வுக்குப் பங்காளிகளான நாம் அவருடைய விடுதலையையும் இரட்சிப்பையும் பெற்றிருக்கிறோம். இந்த சுவிசேஷத் தோடு நாம் வெளியே சென்று இதை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு :

- **கிறிஸ்து** உங்களில் வாழும் போது நாம் கிறிஸ்துவைப் போல் ஆகுமட்டும் நம்மை மாற்றுருவாக்குகிறார்.
- **கிறிஸ்து** உங்கள் வீடுகளிலும், இருதயத்திலும், உங்களிலும் இருப்பது அருமையானது. அது தேன் கூட்டிலிருந்து ஒழுகிவரும் தேனைப் போன்றது.
- **கிறிஸ்து**வைப் பிரசங்கிக்கிறவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக் கிறார்கள். கிறிஸ்துவைப் பிரசங்கியாதவர்கள் சுவிசேஷத்தை அறிவிக்க வில்லை.
- எவ்வளவு அதிகமாக **கிறிஸ்து**வால் நாம் நிரப்பப்பட்டிருக்கிறோமோ அவ்வளவு அதிகமாக நாம் நமது வெறுமையையும் உணருவோம்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason